மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

நிலையறி பரீட்சை – 2021

தமிழ்மொழியும் இலக்கியமும்
தரம் 10

| 22 | T | III |
|---|---|---|

இரண்டு மணித்தியாலம்

கவனிக்க:
அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**01.பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக**

I.“எட்டுணையானும் இரவாது தான் ஈதல் எத்துணையும் ஆற்றல் இனிது”

(அ) இங்கு இரவாது என்பது குறிக்கும் பொருள் யாது?
(ஆ) ‘எத்துணை’ என்பதால் கருதிக்கொள்வது யாது?

II. “கூனல் இளம் பிறை முடித்த வேணியலங்காரர் குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே”

(அ) வேணியலங்காரர் எனக் குறிப்பிடப்பட்டவர் யார்?
(ஆ) ‘எங்கள் மலையே’ என்பதில் எங்கள் என்போர் யார்?

III.“கதிகள் யாவவும் திருமென லோர்ந்திடார் கண்ணில்லாதவர் போலத் திகைப்பார்”

(அ) கதிகள் என்றால் என்ன?
(ஆ) திகைப்பவர் யாருக்கு ஒப்பிடப்பட்டுள்ளது?

**iv**.“தொலைக்காட்சி காதாநாயகியின் தொப்புள் பிரதேசத்தில் மெய்மறந்து இருந்த நான் திரும்பி மகனுடைய கம்பியூட்டர் திரையைப் பார்த்து திகைத்தேன்”

(அ) இங்கு மகன் எனச்சுட்டப்படுவது யாரை?
(ஆ) இங்கு இடம்பெறும் இரண்டு கலைச் சொற்களையும் தருக?

V.“நாவலர் அவர்களின் தமையனார் புத்திரரும் அவர்கள் சரித்திரத்தை எழுதியுள்ளவர்களும் என் ஆசிரியருமாயுள்ளவர்”

(அ) சரித்திரம் என்றால் என்ன?
(ஆ) ஆசிரியர் எனக் குறிப்பிடப்படுவது யாரை?

vi“பெரியோரெல்லாம் பெரியோருமல்லர் சிறியோரெல்லாம் சிறியருமல்லர்”

(அ) பெரியோருமல்லர் என்பதால் கூறப்படுவது யாது?
(ஆ) இக்கூற்றை வலியுறுத்துபவர் யார்?

vii. “ வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும் மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே”

(அ) பிறைச்சந்திரனின் இயல்பு யாது?

(ஆ) விழிவேல் என்பது எவ்வகை அணி?

viii.“தமது அந்தரங்க நண்பர்கள் மூலம் நாவலர் அவர்களுக்குத் தாமே நேரிற் சில கடிதங்களில் தந்திகளில் ஒருவாறு குறிப்பிட்டும் இருந்தார்”

(அ) அந்தரங்கம் என்றால் என்ன?

(ஆ) தாமே எனக் குறிப்பது யாரை?

ix. “நாத மூன்றுரு வான குற்றலா நாத ராரிய நாடெங்கள் நாடே”

(அ) ‘நாதம்’ எனக்குறிப்பிடப்படுவது யாது?

(ஆ) மூன்றுரு என்பதுள் அடங்குவோர் யார்?

**( 20 புள்ளிகள்)**

**02.பின்வரும் செய்யுட் பகுதியையும் உரைநடைப்பகுதியையும் வாசித்து அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

i.உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை

(அ) இவ்வுலகில் உள்ளோர் எவ்வாறானவர்கள்?

(ஆ) இங்கு இடம்பெறும் நீதிக்கருத்துக்களை எடுத்துரைக்குக?

**ii.** சூழு மாய வுலகினிற் காணுறுந்
தோற்றம் யாவையும் மானத மாகுமால்
சூழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்
அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்
தாழு முள்ளத்தர் சோர் வினர், ஆடுபோல்
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்,
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

(அ) இந்த உலகம் எப்படிப்பட்டதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது?

(ஆ) பலபொருள் நாடுவோரின் இயல்பு எத்தகையது?

iii. ஓர் தட்டிலேபொன்னும் ஓர் தட்டிலேநெல்லும் ஒக்கவிக்கும்
கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப் பேர்
ஆர்தட் டினும்தட்டு வாராமலே அன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே

(அ) கொடிய பஞ்ச காலம் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?
(ஆ) சீதக்காதியின் கொடைத்திறம் எத்தகையது?

iv. பிரசண்ட மாருதத்திற்குப் பிறகு என்று சொல்லுகின்ற 'பிறகு' அந்த சபையில் அமைதி நிலவியது. பேச்சு மூச்சு ஒன்றுமில்லை. மேலே கிளம்பின பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்ல கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்து விட்டார்கள். தபால் தந்திக் கட்டுக்கள் நாவலர் அவர்களின் முன்னிலைக்கு வந்து சேர்ந்தன. " ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டங் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம் " என்றார் நாவலர் அவர்கள்.

(அ) பிரசண்ட மாருதம் என்பதன் பொருள் யாது?
(ஆ) பிறிற்றோ கட்சியினர் மெல்ல மெல்ல கீழே இறங்கித் தரைமட்டத்திற்கு வந்து விட்டதன் காரணம் யாது?

**v**. மறுபடியும் நான் அந்தக் கடைக்கு கம்பியூட்டரை கொத்துக்கொத்தாக ஆராய்ச்சி செய்து வித்துவான் பட்டம் பெற்ற ஒரு நண்பரோடு படையெடுத்தேன். நண்பர் கம்பியூட்டருக்கு தலபுராணம் எழுதியவர். விடுவாரா? இப்போது வட்டியும் முதலுமாக அவர்களைப் போட்டு குடை குடை என்று குடைந்தார். அவர்களுடையய சம்பாஷணை முற்றிலும் ஒரு புதிய பாஷையில் நடைபெற்றது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இரண்டு பேருடைய வாயையும் மாறி மாறிப் பார்த்தேன். ஹார்ட் ட்ரைவ், ப்ளொப்பி, மெகா பைட், சொப்ட்வேர், இன்டர்பேஸ், யூபிஎஸ் என்ற வார்த்தைகள் எல்லாம் எனக்கு சிதம்பர சக்கரமாக இருந்தன

அ) நண்பரின் சிறப்புக்களாகக் கூறப்பட்டவற்றைத் தருக?
ஆ) சிதம்பர சக்கரம் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

**( 20 புள்ளிகள்)**

3. **நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்**

(அ) நாவலரின் வாதத்திறன்

(ஆ) பண்டிதமணியின் படைப்பாற்றல்

ஆகியன வெளிப்படுத்தப்படும் வகையினை விளக்குக.

**அல்லது**

**பாரதியார் சுயசரிதையில்**

(அ) பெண்ணை எதிர்பார்த்துக் காத்திருந்த பாரதியின் நிலை

(ஆ) அப்பகுயில் இடம்பெற்றுள்ள அணிப்பயன்பாடு

ஆகியன புலப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக

**(15 புள்ளிகள்)**

**4.கம்பியூட்டர் என்ற சிறுகதையில்,**

(அ) கம்பியூட்டர் பற்றிய வர்ணனைகள்

(ஆ) குடும்பத்தில் ஏற்பட்ட மகிழ்வு

ஆகியன விபரிக்கப்படும் வகையினை விளக்குக

**அல்லது**

**திருக்குற்றாலக்குறவஞ்சியில்**

(அ) திருக்குற்றாலமலையின் சிறப்பு

(ஆ) உயர்வுநவிற்சி அணிப்பிரயோகம்

என்பனவற்றைச் சான்றாதாரங்களுடன் விளக்குக

**(15புள்ளிகள்)**

- **5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக**

5. **தண்டாமரையினுடன் பிறந்தும்** என்ற நீதிப்பாடலில்

(அ) அறிவுடையோர் இயல்பு

(ஆ) அறிவற்றோர் இயல்பு

ஆகியனவற்றினை விளக்குக

**(10புள்ளிகள்)**

6. **பங்கப்பழனத்து உழும் உழவர்** என்ற பாடலில்

(அ) சோழ நாட்டின் வளச்சிறப்பு

(ஆ) சோழ மன்னனின் பெருமை

என்பவற்றினை விளக்குக.

**(10புள்ளிகள்)**

7.**தனிப்பாடல்**களில்

(அ) காளமேகப் புலவரின் கவிச் செருக்கு

(ஆ) எள்ளுக்கும், பாம்புக்கும் இடையேயான சிலேடை

என்பன வெளிப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

**(10புள்ளிகள்)**